**The Honest Driver – நேர்மையான ஆட்டோ டிரைவர் – Tamil Stories For Kids** – செந்திலும் கணேசனும் நல்ல நண்பர்கள்

ஒருநாள் வீட்டுக்கு போகும்போது நல்ல மழை பெஞ்சு ரெண்டுபேரும் நனஞ்சுட்டாங்க




நேர்மையான ஆட்டோ டிரைவர்

வீட்டுக்குப்போக ஆட்டோ ரிக்ஸாவ கூப்புட்டாங்க யாருமே நிக்கல

கடைசியா ஒருதர் நிப்பாட்டுனாரு,உடனே ரெண்டுபேரும் உள்ள ஏறுனாங்க

ரெண்டுபேருக்கும் டீ குடிக்கணும்னு ஹோட்டல்ல நிப்பாட்டுனாங்க

ஆனா அந்த டிரைவர் மட்டும் எவ்வளவு வேண்டி கேட்டுகிட்டும் டீ குடிக்க மாட்டேன்னு சொன்னாரு

ஒரு வழியா வீடு வந்து சேந்ததுக்கு அப்புறமா

சார் நீங்க ஏன் டீ குடிக்க மாட்டேன்னு சொன்னீங்கன்னு கேட்டாங்க

இல்ல சார் மதியம் என்னோட பாட்டி இறந்துட்டாங்க அவுங்களோட சடங்குக்காக பணம் சேக்கத்தான் சவாரி வந்தேன் நீங்க கொடுத்த காசு அதுக்கு உபயோகமா இருக்கும்

வேண்டிய பணம் சம்பாதிக்கிற வரைக்கு டீ குடிக்க என் மனசு ஒத்துக்கிடலனு சொன்னாரு

நண்பர்கள் ரெண்டு பேரும் எல்லா பணத்தையும் அவுங்களே கொடுக்க முன்வந்தாங்க

அதையும்ஏத்துக்க மறுத்தார் அந்த டிரைவர்

அவரோட கடின உழைப்பையும் நேர்மையான வாழ்க்கையையும் பார்த்து வியந்தாங்க அந்த ரெண்டு நண்பர்களும்

Tamil